**ஆகஸ்ட் – 18**

# TNPSC துளிகள்

- வட துருவத்தின் மீது பறந்த முதலாவது இந்திய விமானம் ஏர் இந்தியா விமானமாகும். தில்லியிலிருந்து சான் பிரான்சிஸ்கோ செல்லும் ஏர் இந்தியா விமானம் வழக்கமாக அட்லாண்டிக் அல்லது பசிபிக் பெருங்கடலின் மீது பறக்கும். ஆனால் ஆகஸ்ட் 15 அன்று வடக்கில் 0° மீது பறந்தது.

# தமிழ்நாடு செய்திகள்

## அம்மா ரோந்து வாகனங்கள்

- இது பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் ஆகியோருக்கு உதவுவதற்காக தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுள்ள ஒரு புதிய முன்னெடுப்புத் திட்டமாகும்.
- இந்த ரோந்து வாகனங்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்காக காவல் துறையின் சிறப்புப் பிரிவிற்கு உதவுகின்றன.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான அனைத்துப் புகார்களும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள சிறப்புப் பிரிவினால் விசாரணை செய்யப்பட விருக்கின்றன.
- இந்த ரோந்து வாகனங்கள் அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் கீழ் செயல்படும்.
- மாநில அரசு மற்றும் மத்திய அரசினால் நிதியுதவி அளிக்கப்பட்ட இந்த ரோந்து வாகனங்கள் சென்னையில் விரைவில் ரோந்துப் பணியைத் தொடங்கவிருக்கின்றன.
- இந்த ரோந்து வாகனங்கள் 1091 மற்றும் 1098 என்ற தொலைபேசி எண்களின் காட்சிப் படத்தையும் கொண்டிருக்கும்.




## பிராந்திய வானிலை மையம் (RMC) - நுங்கம்பாக்கம்

- நுங்கம்பாக்கத்தில் உள்ள சென்னை பிராந்திய வானிலை மையம் (RMC - Regional Meteorological Centre) 100 ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிய தனது சிறப்பான பணிக்காக

உலக வானிலை அமைப்பால் (World Meteorological Organization - WMO) அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- நாட்டில் இந்த அங்கீகாரத்தைப் பெற்ற ஐந்து மையங்களில் இதுவும் ஒன்றாகும்.
- மற்ற மையங்களாவன மும்பை, பஞ்ஜிம் (கோவா), புனே மற்றும் திருவனந்தபுரம் ஆகியனவாகும்.
- சென்னை வானிலை ஆய்வு மையமானது கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள முதலாவது நவீன வானிலை மற்றும் விண்வெளிக் கண்காணிப்பு மையங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

***இதுபற்றி***

- RMC ஆனது மதராஸ் கண்காணிப்பு மையமாகத் தொடங்கப்பட்டது. 1786 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட முதலாவது வானிலை ஆய்வு மையம் இதுவாகும்.
- இது எழும்பூரில் ஆங்கில கிழக்கிந்திய வணிகக் குழுவைச் சேர்ந்த அதிகாரியான வில்லியம் பெட்ரி என்பவரால் தொடங்கப்பட்ட ஒரு தனியார் மையமாகும்.
- 1789 ஆம் ஆண்டில் பெட்ரியின் இந்தத் தனியார் மையமானது ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்திற்கு மாறியது.
- பின்னர் அந்த வானிலை ஆய்வு மையம் கொடைக்கானலுக்கு மாற்றப்பட்டது.
- RMC ஆனது 1792 ஆம் ஆண்டில் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் மதராஸின் அப்போதைய ஆளுநரான சர் சார்லஸ் ஒக்கேலே என்பவரால் தொடங்கப்பட்டது.
- 1875 ஆம் ஆண்டில் இந்திய வானிலை ஆய்வுத் துறை தொடங்கப்படுவதற்கு முன்னதாகவே RMC தொடங்கப்பட்டுள்ளது.
- இது தென்னிந்திய தீபகற்பத்தில் உள்ள ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் மற்றும் அந்தமான் நிகோபார், இலட்சத் தீவுகள், புதுச்சேரி ஆகிய ஒன்றியப் பிரதேசங்கள் ஆகியவற்றின் காலநிலை சார்ந்த நடவடிக்கைகளுக்கு பொறுப்பு மிக்கதாக விளங்குகின்றது.
- இது இந்திய வானிலைத் துறையின் (IMD - India Meteorological Department) 6 பிராந்திய வானிலை ஆய்வு மையங்களில் ஒன்றாகும்.
- இதர பிராந்திய மையங்கள் கொல்கத்தா, குவஹாத்தி, மும்பை, நாக்பூர் மற்றும் புது தில்லி ஆகிய நகரங்களில் அமைந்துள்ளன.

# தேசியச் செய்திகள்

## இந்தியா – பூடான் உறவுகள்

- பூடானுக்கு தனது இரண்டாவது முறையாக பயணத்தை மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் மங்கடெச்சு நீர்மின் ஆற்றல் ஆலையைத் திறந்து வைத்தார்.
- இந்தியா மற்றும் பூடான் ஆகிய நாடுகளுக்கிடையே நீர்மின் துறையில் 50 ஆண்டு கால ஒத்துழைப்பை அனுசரிப்பதற்காக அஞ்சல் தலைகளை பிரதமர் வெளியிட்டுள்ளார்.
- மேலும் இவர் பூடானில் ரூபே அட்டையையும் தொடங்கி வைத்தார்.
- பூடானில் தெற்காசியச் செயற்கைக் கோளைப் பயன்படுத்துவதற்காக இஸ்ரோவின் உதவியுடன் உருவாக்கப்பட்ட புவிக் கட்டுப்பாட்டு மையம் மற்றும் சாட்காம் அமைப்பு ஆகியவற்றை மோடி மற்றும் லோடேய் ஷெரிங் (பூட்டானின் பிரதமர்) ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர்.
- 1949 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 அன்று இந்தியா மற்றும் பூடான் ஆகிய நாடுகள்

"சகோதரத்துவ ஒப்பந்தம்" ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

- மீண்டும் 2007 ஆம் ஆண்டில் பூடானுடனான 1949 ஆம் ஆண்டு ஒப்பந்தம் குறித்து இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு புதிய சகோதரத்துவ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்தப் புதிய ஒப்பந்தமானது முழுமையான இறையாண்மையுடன் தனது வெளியுறவுக் கொள்கை மீதான இந்தியாவின் வழிகாட்டுதலை பூடான் மேற்கொள்ள வேண்டும் என்ற விதிமுறையை மாற்றியமைக்கின்றது. மேலும் இந்த ஒப்பந்தமானது ஆயுதங்கள் இறக்குமதிக்கான விவகாரத்தில் பூடான் இந்தியாவிடம் அனுமதி பெற வேண்டியதில்லை என்றும் கூறுகின்றது.
- 2014 ஆம் ஆண்டில் இந்தியாவின் பிரதமராக மோடி பூடானுக்கு தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டார்.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஹார்மோனிஓஎஸ் (HarmonyOs)

- சீனாவின் தொலைத் தொடர்பு நிறுவனமான ஹுவாவே (Hauwei), ஹார்மோனிஓஎஸ் என்ற தனது சொந்த இயங்கு தள அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலும் இது சீன மொழியில் ஹாங்மெங்ஓஎஸ் (HongmengOs) என்றும் அழைக்கப்படுகின்றது.
- இந்த இயங்கு தள அமைப்பு அனைவருக்கும் பொதுவானதாகும். இது புழக்கத்திற்கு வரவிருக்கும் கூகுளின் ஃப்யூஷியாவிற்குப் போட்டியாக விளங்கும்.
- ஹானர் என்பது ஹுவாவே தொழில்நுட்ப நிறுவனத்திற்குச் சொந்தமான ஒரு திறன்பேசி வகையாகும்.
- ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை மீறியதற்காக ஹுவாவே நிறுவனமானது அமெரிக்க அரசாங்கத்தால் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## புவிசார் குறியீடு

- மத்திய வணிக மற்றும் தொழிற் துறை அமைச்சகத்தின் தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தின் ஊக்குவிப்பிற்கான துறையானது மேலும் 3 புதிய புவிசார் குறியீட்டு (Geographical Indication - GI) பொருட்களைப் பதிவு செய்துள்ளது.
- அவைகளாவன திரூர் வெற்றிலை, தவல்ஹ்லோஹ்புவன் மற்றும் மிசோ புவான்சேய்.
- GI என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியில் உருவாக்கப்படும் பொருளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு அடையாளக் குறியீடாகும். இது அந்த உருவாக்கத்தின் காரணமாக இருக்கும் குணங்கள் அல்லது நன்மதிப்பைக் கொண்டிருக்கும்.
- திரூர் வெற்றிலை இலையானது, அதன் லேசான தூண்டல் செயல் மற்றும் மருத்துவப் பண்புகள் ஆகிய இரண்டிற்காகவும் அறியப்படுகின்றது.
- தவல்ஹ்லோஹ்புவன் என்பது மிசோரத்தைச் சேர்ந்த நெருக்கமாக நெய்யப்பட்ட ஒரு துணி வகையாகும்.
- மிசோ புவான்சேய் என்பது பல வண்ணங்கள் கொண்ட மிசோ சால்வையாகும். இது ஒவ்வொரு மிசோரம் பெண்மணியின் முக்கியமான மற்றும் இன்றியமையாத உடைமையாகும்.







# மாநிலச் செய்திகள்

## சுரங்கப் பாதை அருங்காட்சியகம்

- ❖ மும்பையில் உள்ள ராஜ் பவனில் நிலத்திற்கடியில் அமைந்த சுரங்கப் பாதை அருங்காட்சியகத்தைக் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் திறந்து வைத்தார்.
- ❖ இந்த சுரங்கப் பாதையானது முதலாம் உலகப் போருக்கு முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்தது.
- ❖ முன்னதாக, மறுகட்டமைப்பிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஆளுநரின் அலுவலக மற்றும் குடியிருப்பு கட்டிடமான ஜல் பூசன் கட்டிடத்திற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் அடிக்கல் நாட்டினார்.
- ❖ ஜல் பூஷன் ஏறத்தாழ 200 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்டுள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதுகள்

- ❖ பஜ்ரங் புனியா மற்றும் புகழ்பெற்ற பாரா தடகள வீரர் தீபா மாலிக் ஆகியோர் 2019 ஆம் ஆண்டின் இராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- ❖ 2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற விளையாட்டுகளில் வெள்ளிப் பதக்கம் வென்ற போது, பாரா தடகளப் பதக்கத்தை வென்ற முதலாவது பெண் வீராங்கனையாக தீபா உருவெடுத்துள்ளார்.
- ❖ கடந்த ஆண்டு, இவர் ஈட்டி எறிதல் மற்றும் வட்டு எறிதல் போட்டிக்கு மாறி ஜகர்த்தாவில் ஒரு புதிய ஆசியச் சாதனையைப் படைத்துள்ளார். தொடர்ந்து 3 ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் (2010, 2014, 2018) பதக்கங்களை வென்ற ஒரே இந்தியப் பெண்மணியாக இவர் உருவடுத்துள்ளார்.
- ❖ 2017 ஆம் ஆண்டு ஈட்டி எறிதல் வீரரான தேவேந்திர ஜஹஜ்ஹாரியாவிற்குப் பின்பு புகழ்பெற்ற இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இரண்டாவது பாரா தடகள

வீரராக இவர் உருவெடுக்கவிருக்கின்றார்.

*இதுபற்றி*

- இராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது என்பது இந்தியாவில் வழங்கப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கான உயரிய விருதாகும்.
- இது ஒவ்வொரு ஆண்டும் மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தினால் வழங்கப்படுகின்றது.
- இந்த விருது ஒரு ஆண்டில் அதிகபட்சமாக 3 நபர்களுக்கு வழங்கப்பட முடியும்.
- 1992 ஆம் ஆண்டில் ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதினை வென்ற முதல் வெற்றியாளர் விஸ்வநாதன் ஆனந்த் ஆவார்.



## தேசிய விளையாட்டு விருதுகள் 2019

- தேசிய விளையாட்டு விருதுகள் 2019ற்கான தேர்வுக் குழுவானது விமல் குமார் (பேட்மின்டன்), சந்தீப் குப்தா (மேசைப் பந்தாட்டம்) மற்றும் மொஹிந்தர் சிங் தில்லான் (தடகளம்) ஆகியோரை துரோணாச்சாரியா விருதின் வழக்கமான பிரிவிற்காகப் பரிந்துரை செய்துள்ளது.
- மெஸ்பன் பட்டேல் (ஹாக்கி), ராம்பிர் சிங் கோகார் (கபடி) மற்றும் சஞ்சய் பரத்வாஜ் (கிரிக்கெட்) ஆகியோர் துரோணாச்சாரியா விருதின் வாழ்நாள் சாதனைப் பிரிவிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- விளையாட்டு வீரர்கள் அல்லது அணிகளுக்கு வெற்றிகரமாகப் பயிற்சியளித்த மற்றும் சர்வதேசப் போட்டிகளில் சிறந்த வெற்றியைப் பெறுவதற்கு விளையாட்டு வீரர்களுக்கு உதவிய புகழ்பெற்ற பயிற்சியாளர்களைக் கௌரவிப்பதற்காக துரோணாச்சாரியா விருதுகள் வழங்கப்படுகின்றன.
- மேலும் இந்தக் குழு அர்ஜுனா விருதுக்காக 19 விளையாட்டு வீரர்களையும் தேர்ந்தெடுத்துள்ளது.
- அர்ஜுனா விருதினைப் பெறுவதற்கு ஒரு விளையாட்டு வீரர் முந்தைய 4 ஆண்டுகளில் சர்வதேச அளவில் தொடர்ந்து சிறந்த செயல்திறனைக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் தலைமைப் பண்பு, விளையாட்டுத் திறன் மற்றும் ஒழுக்க உணர்வு ஆகிய பண்புகளையும் கொண்டிருக்க வேண்டும்.
- 5 விளையாட்டு வீரர்கள் தயான் சந்த் விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.
- தனது விளையாட்டுத் திறன் மூலம் பங்காற்றிய மற்றும் ஓய்வுக்குப் பின்பும் கூட

விளையாட்டுகளை ஊக்குவிக்கும் விளையாட்டு வீரர்களுக்கு தயான் சந்த் விருது வழங்கப்படுகின்றது.

- இந்த விருதுகள் புகழ்பெற்ற ஹாக்கி வீரரான தயான் சந்தின் பிறந்த தினமான தேசிய விளையாட்டுகள் தினத்தின் போது ராஷ்டிரபதி பவனில் இந்தியக் குடியரசுத் தலைவரால் வழங்கப்படவிருக்கின்றன.
- முன்னதாக, தேசிய விளையாட்டு விருதுகளைப் பெறும் வீரர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 12 நபர்கள் கொண்ட ஒரு குழுவை மத்திய விளையாட்டுத் துறை அமைச்சகம் அறிவித்திருந்தது.
- 6 முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற மேரி கோம், கால்பந்து அணியின் முன்னாள் தலைவர் பாய்ச்சுங் பூட்டியா, பெண் கிரிக்கெட் வீராங்கனை அஞ்சும் சோப்ரா, முன்னாள் நீளம் தாண்டுதல் வீரர் அஞ்சு போபி ஜார்ஜ் மற்றும் மேசைப் பந்து பயிற்சியாளர் கமலேஷ் மேத்தா ஆகியோர் இந்தத் தேர்வுக் குழுவில் இடம் பெற்ற தடகள வீரர்களாவர்.

| Award Name | Winners |
|---|---|
| **Arjuna Award** | Tajinder Pal Singh Toor (athletics),<br>Mohammed Anas Yahiya (athletics),<br>S Bhaskaran (body building),<br>Sonia Lather (boxing),<br>Ravindra Jadeja (cricket),<br>Chinglensana Kangujam (hockey),<br>Ajay Thakur (kabaddi),<br>Gaurav Singh Gill (motor sports),<br>Pramod Bhagat (para-badminton),<br>Anjum Moudgil (shooting),<br>Harmeet Rajul Desai (table tennis),<br>Pooja Dhanda (wrestling),<br>Fouaad Mirza (equestrian),<br>Gurpreet Singh Sandhu (football),<br>Poonam Yadav (cricket),<br>Swapna Burman (athletics),<br>Sundar Singh Gurjar (para -athletics),<br>Bhamidipati Sai Praneeth (badminton),<br>Simran Singh Shergill (polo) |
| **Dronacharya Award (Regular)** | Vimal Kumar (badminton),<br>Sandeep Gupta (table tennis),<br>Mohinder Singh Dhillon (athletics) |
| **Dronacharya Award (Lifetime)** | Mezban Patel (hockey),<br>Rambir Singh Khokar (kabaddi),<br>Sanjay Bhardwaj (cricket). |
| **Dhyan Chand Award** | Manuel Fredricks (hockey),<br>Arup Basak (table tennis),<br>Manoj Kumar (wrestling),<br>Nitten Kirrtane (tennis),<br>C Lalremsanga (archery). |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★